Judicial Form No.53
( See Rule 42 )
DEPOSITION OF WITNESSES
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.II. TIRUPATTUR
Case No CC.NO. 264/2023, Cr.No.808/2020, Kandili PS
DEPOSITION OF PROSECUTION SIDE EVIDENCE No.5, Page.No.

| | |
|---|---|
| **பெயர்** | செந்தமிழ்ச்செல்வி |
| **வயது** | 43 |
| **தந்தை/கணவர் பெயர்** | குமார் |
| **கிராமம்** | வெங்களாபுரம் |
| **மாவட்டம்** | திருப்பத்தூர் |
| **தொழில்** | கிராம உதவியாளர் |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 ( Central Act 44 of 1969 ) on the 09th day of October 2025.

சாட்சி ஆஜர் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

**<u>முதல் விசாரணை</u> (1ம் எதிரி மனுவின் பேரில் ஆஜரில்லை, 2ம் எதிரி ஆஜர்)**

நான் மேற்படி விலாசத்தில் வசித்து வருகிறேன். நான் கிராம உதவியாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 27.07.2020 அன்று மண்டலநாயனகுண்டா கிராமத்தில் தினேஷ்குமார் என்பவர் அவருடைய நிலத்ததை அளக்க வேண்டும் என்று டவர் மீது ஏறி பிரச்சனை செய்ததால் நான் போலீசாருக்கு தகவல் தெரிவித்ததன் பேரில் போலீசாரும் தாசில்தாரும் அங்கு வந்தனர். பின்னர் தாசில்தார் உத்தரவின் பேரில் அன்று மாலை 03.00 மணியளவில் நான், தாசில்தார் மோகன், சர்வேயர் பூபதி, விஏஓ மணிகண்டன் ஆகியோர் அவரின் நிலத்தை அளந்து எல்லைக் கல் நட்டு விட்டு வந்து விட்டோம். அவர் கீழே இறங்கி விட்டார். பின்னர், மறுநாள் அந்த கல்லை எதிரிகள் சின்னதுரை மற்றும் அவரது மகள் சிலம்பரசி ஆகியோர் பிடுங்கி விட்டு விஏஓ மற்றும் சர்வேயரை தகாத வார்த்தைகளால் திட்டினர். பின்னர் விஏஓ தாசில்தாருக்கு தகவல் தெரிவித்ததும் தாசில்தார் புகார் கொடுக்குமாறு கூறினார் அதனால் கந்திலி காவல் நிலையத்தில் புகார் அளித்தோம். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :-</u>**

திநேஷ்குமார் டவரின் மீது ஏறியது குறித்து கிராம நிர்வாக அலுவலருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. அப்போது தாசில்தார் மற்றும் ஊர் மக்கள் சுமார் 50 நபர்கள் இருந்திருப்பார்கள். கிராம நிர்வாக அலுவலர் எதிரிகள் மீது புகார் கொடுத்தார் என்றாலும், திநேஷ்குமார் மற்றும் ராஜா குடும்பத்தார் மீது புகார் அளிக்கவில்லை என்றாலும் சரிதான். 27.07.2020 அன்று 11.30 – 12.00 மணியளவில் சம்பவயிடத்திற்கு சென்றோம். நிலத்தை 02.30 மணியிலிருந்து இரவு 07.00 மணி வரையில் அளந்து இருப்போம். நிலம் அளப்பது குறித்து பக்கத்து நிலத்துக்காரர்களுக்கு அறிவிப்பு கொடுக்கவில்லை என்றால் சரிதான். எதிரிகள் 29ம் தேதி எல்லைக்கல்லை பிடுங்கி போட்டனர். நிலம் அளந்து மறுநாள் அமைதி பேச்சு வார்த்தை தாசில்தார் அலுவலகத்தில் நடைபெற்றது என்றால் சரிதான். அங்கும் பிரச்சனை ஏற்பட்டது என்றாலும் திருப்பத்தூரில் உள்ள அலுவலகத்தில் தாசில்தாருக்கும் எதிரிகள் மற்றும் ஊர் நபர்களுக்கும் வாக்குவாதம் ஏற்பட்டது என்றால் சரிதான். அங்கு பிரச்சனை ஏற்பட்டதால் கிராம நிர்வாக அலுவலர் மூலம் புகார் அளிக்கும்படி தாசில்தார் கூறினார் என்றால் சரிதான். கிராம நிர்வாக அலுவலர் அளித்த புகாரின் அடிப்படையில் நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். எதிரிகளின் நிலத்தின் சர்வே எண் 195/2B. போலீசார் விசாரணையில் இது குறித்து கூறியுள்ளேனா என்றால் இல்லை. தாசில்தாரை தரக்குறைவாக பேசியதால் கிராம நிர்வாக அலுவலர் பொய்யான புகாரை அளித்துள்ளார் என்றாலும் சம்பவம் நடைபெறவில்லை என்றாலும் சரியல்ல. பிரச்சனைக்குரிய இடமானது யாருக்கு சொந்தமானது என்றால் தெரியாது. திநேஷ் குமார் டவரின் மீது ஏறி பிரச்சனையானதால் பொய்யான புகாரை அளித்துள்ளார் என்றால் சரியல்ல. எதிரிகள் எத்தனை கற்களை பிடுங்கினார்கள் என்றால் 3 கற்களை பிடுங்கி இருப்பார்கள் என்று நினைக்கிறேன். அது குறித்த புகைப்படத்தை விஏஓ தனது போனில் புகைப்படம் எடுத்தார். நான் கூறுவது போல் எதிரிகள் எந்தக் கல்லையும் பிடுங்க வில்லை என்றாலும் எதிரிகள் தரக்குறைவாக யாரையும் பேசவில்லை என்றாலும் நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை :– இல்லை**

Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him/her to be Correct.

JUDICIAL MAGISTRATE NO.II

KOVENDHAN S

Digitally signed by KOVENDHAN S
DN: cn=KOVENDHAN S, ou=TIRUPPATHUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Location: TIRUPATHUR
Date: 2025.10.09 18:28:12 +0530

Judicial Magistrate No.II,
Tirupathur.